**இலங்கை முதலீட்டுச் சபை - 2019**

-----------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------

இலங்கை முதலீட்டுச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை முதலீட்டுச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

----------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணங்காதுள்ள குறித்த நியமத்திற்கான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்: -** | | |
| (i) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,506,692,721 குறைத்தெழு திய | ஆதனம், பொறி, உபகரணம் என்ற வகுதிக்குள் வருகின்ற ஆதனமொன்றின் எஞ்சிய பெறு மதி அது கைதவிர்ப்புச் செய்ய | சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன முன்னைய மதிப்பீட் டிலிருந்து வேறுபடுமாயின் குறைந் |

| | | |
|---|---|---|
| பெறுமதியுடைய 07 வகையான சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன மீளாய்வு செய்யப்பட் டிருக்கவில்லை. | ப்படுகையில் அல்லது ஏலமிட ப்படுகையில் தற்போது பெறப் படுகின்றது. இது சொத்துக்க ளின் பிரதான உப வகைப்படுத் தலுடன் சம்பந்தப்பட்ட சிக்க லான கட்டமைப்பினையும் ஒருங்கிணைந்த பகுதிகள் மற்றும் கூறுகளைக் கொண்டிரு ப்பதனாலும் சபையின் சொத்து அளவு காரணமாகவும் இடம் பெறுகின்றது. மோட்டார் வாகன ங்கள் மற்றும் கணனிகள் மீதான சபையின் தற்போதைய கொள்கை 2020 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்படவுள்ள துடன் ஆனால் பெறுமானத் தேய்வின் மீதான மீளாய்வின் பெறுபேற்றின் தாக்கம் பொருண் மையற்றதாக கருத்திற்கொள்ள ப்படும். | தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப் பட்டு, அவ்வாறான மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகள் மீதான மாற்றம் என LKAS 08 இன் படி கணக்கீடு செய்யப்படுதல் வேண் டும். |
| **(ii)** நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடங்கியு ள்ள முழுமையாகத் தேய்விட ப்பட்ட 125 மோட்டார் வாகனங்கள் மற்றும் 3378 கணனிகள் மற்றும் துணைப் பாகங்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்துவதற்குத் தேவை யான நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் மேற்காள்ளப் படும். | தற்போது பயன்படுத்தப்பட்டு வருகி ன்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| **(ஆ) LKAS 40 – முதலீட்டு ஆதனம்** | | |
| முதலீட்டு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற மற்றும் 2019 இல் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ள ரூபா 15,833,204 கிரயமான பிங்கிரிய ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள மூன்று காணிகள் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக் களில் முதலீட்டு ஆதனம் என இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் திருத்து வதற்காக குறித்துக் கொள்ளப் பட்டது. | முதலீட்டு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற காணிகள் நிதிக் கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களாக இனங்காணப்படுதல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** வலயத்திலுள்ள பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறியின் படிவுகளை அகற்றுவதற்காக சீதாவக ஏற்றுமதிப் பதணிடல் வலயத்தில் இரண்டு குழிகளை அகழ்வதற்காக ஏற்பட்ட ரூபா 13,612,996 செலவினத் தொகையினை மூலதனச் செலவினமாக கருத முடியாத போதிலும், மூலதன முடிவுறா வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன முடிவுறா வேலைகளின் மீதி ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இதனை 2020 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக சீராக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | மூலதனச் செலவினமாக கருதப்பட முடியாத செலவினம், மூலதன முடிவுறா வேலைகளில் உள்ளடக்கப்படக் கூடாது. |
| **(ஆ)** ஏற்றுமதி பதணிடல் வலயம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக 2019 யூன் 03 ஆந் திகதிய 2126/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 96,166,796 கிரயமான பிங்கிரியவிலுள்ள காணி, சபையின் ஆதனமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரண மீதி ஒத்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | (2019 யூன் 03 ஆந் திகதிய 2126/12 ஆம் இலக்க) அதிவிசேட வர்த்தமானியின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட பிங்கிரியவிலுள்ள காணியினை பொறுப்பளிக்கும் கட்டளையில் அதிமேதகு சனாதிபதி அவர்கள் கைச்சாத்திடும் வரை அதனை மூலதமாக்க முடியாதுள்ளது. பொறுப்பளித்தல் கட்டளையினை பெற்றுக்கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கப்படும் | பொறுப்பளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் சட்டரீதியான ஆவணமாக இருப்பதனால் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட காணிகள், சபையின் ஆதனங்களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) சபைக்கு பணத்தினை மீளளிக்கும் அடிப்படையில் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சுச் செயலாளரின் கோரிக்கைக்கு அமைய வீதியொன்றை அகலப்படுத்துவதற்காக காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்குச் செலுத்திய ரூபா 51,500,000 தொகையான பூர்வாங்க | இதனை 2020 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக சீராக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீளப்பெறப்படும் அடிப்படையில் வெளித் தரப்பினர் சார்பில் சபையால் செய்யப்பட்ட செலவினம், நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டியவையாக காண்பிக்கப்படுதல் வேண்டும். |

நிர்வாகச் செலவினம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அமைச்சிட மிருந்து பெறவேண்டிய தொகையாக காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் கிடைக்காமை.

| விபரம் | தொகை | கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பிற்போட்ட செலவினத்தின் காலக்கழிவு<br>- சபை அலுவல கத்தை புதிய இடத்தில் அமை த்தல் | 6,169,237 | 2016 சனவரி 01 இற்கு முன்ன ரான மீதிக்குரிய உறுதிப்படுத்தல் | 2016 சனவரி 01 இற்கு முன்னரான பிற்போட்ட செலவின விபரங்களை பெற்றுக்கொள்ள முடி யாத நிலையில் சபை உள்ளது. இருப்பினும், இந்த விடயம் முன் னைய கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந் துரையாடப்பட்டதுடன், பிற்போட்ட செலவினத்தி ற்காக பதிவேடொன்றைப் பேணுவதற்கு இணங்க ப்பட்டது. அதற்கான நடவடிக்கையினை சபை ஏற்கனவே எடுத்துள்ளது. | 2016 சனவரி 01 இற்கு முன்னரான மீதிக்குரிய உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிற்போட்ட வலய அபிவிருத்திச் செலவினம் | 37,500,264 | 2016 சனவரி 01 இற்கு முன்ன ரான மீதிக்குரிய உறுதிப்படுத்தல் | | |

## 1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** 1978 இன் 04 ஆம் இலக்க முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் 13 (2) (ஆ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வரிசை அமைச்சினது அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை | இடர் படிக்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமும் ஏனைய படிகளிற்காக பணிப் பாளர் சபையின் அங்கீகார மும் பெற்றுக் கொள்ளப்பட் டுள்ளது. கௌரவ அமைச்ச | வரிசை அமைச்சின் அமைச் சரது அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாத்திரம் பெற்று அதன் பதவியணி யினருக்கு சபை ரூபா 608,822,284 மொத்தத் தொகையான 08 படிகளைச் செலுத்தியிருந்தது. | ரின் அங்கீகாரம் 2019 மே இல் கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கோரப்பட்ட அங்கீகாரம் வழங்கப்படாத போதிலும், பூச்சிய வட்டி வீதத்தினைக் கொண்ட மூன்று கடன் வகைகளும் 4.2 சதவீதத்தினைக் கொண்ட ஆறு கடன் வகைகளும் 2007 முதல் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் அமுல்படுத்தப் பட்டு வருவதுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியிணர் கடன் மீதிகள் ரூபா 856,887,308 ஆகக் காணப்பட்டது. | சபையின் கடன் திட்டம் அது ஆரம்பிக்கப்பட்டது முதல் பணிப்பாளர் சபையின் அங்கீ காரத்துடன் நடைமுறைப்படுத் தப்பட்டு வருவதுடன் அந்த நலன்களை பதவியணியினர் அனுபவித்து வருகின்றனர். அதனைத்தொடர்ந்து, குறித்த அனைத்துக் கடன் திட்டங் களும் 2007 மார்ச் 20 ஆந் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சபையின் மனித வளக் கொள்கைக் கையேட்டில் உள்ளடக்கப்ப ட்டுள்ளன.<br>சபையின் மனித வளக் கொள்கை கையேட்டிற்கான அங்கீகாரம் 2014.03.10 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்திடம் கோரப்பட் டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக் களத்திடமிருந்து பதவியணி யினர் கடன் திட்டத்திற்காக அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |
| (இ) வீடமைப்பு நோக்கத்திற்காக சபையின் ஊழியர் ஒருவர் அரசாங்க அல்லது தனியார் வங்கி ஒன்றிடமிருந்து அல்லது கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனொன்று உள்ளபடியான வட்டி வீதத்திற்கும் 4.2 சதவீத வட்டி வீத்தற்கும் இடையிலான வேறுபாட்டினை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் 20.5 சதவீத உச்ச வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படுகின்றது. மீளாய்வாண்டின் போது மேற்படி கடன் திட்டத்தின் கீழ் ரூபா 42,410,893 தொகை பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படாது மீளளிக்கப்ப ட்டிருந்தது. | சபையின் மனித வளக் கொள்கை கையேட்டிற்கான அங்கீகாரம் 2014.03.10 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்திடம் கோரப்பட் டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக் களத்திடமிருந்து பதவியணி யினர் கடன் திட்டத்திற்காக அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அங்கீகரித்த தொழில் முயற்சி களிலிருந்து நிலுவையாக காணப்ப ட்ட தொகை ரூபா 725,609,535 ஆனதுடன் அதில் ரூபா 328,869,617 அல்லது 45 சதவீதமானவை இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப் படாதுள்ளது. | 2012 வரை நிலுவையாக உள்ள தொகையினை பதவழிப்புச் செய் வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேவை யான விபரங்கள் வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2013 முதல் திரண்டுள்ள நிலுவைகளை ஆய்ந்தறிவதற்கு நிறைவேற்றுப் பணிப்பாளர் (அறவீடுகள்) நியமிக்க ப்பட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்படாதுள்ள வருடாந்தக் கட்டணப் பட்டியல்களை, அந்த நிலுவைகளை ஆய்ந்தறிந்து உடன்படிக்கையிலுள்ள நிபரந்தணைகளின் பிராகரம் நடவடிக்கை எடுப்பதற்காக அறவிடுகைகள் பிரிவிற்கு கையளிக்குமாறு நிதித் திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள மீதிகள் இனிமேலும் தாமதிக்காது அறவி டப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வருடாந்தக் கட்டணம் ரூபா 320,884,027 ஆனது டன் அதில் ரூபா 188,720,430 அல்லது 59 சதவீதமானவை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப் படாதுள்ளது. | | நிலுவையாக உள்ள மீதிகளை தாமதிக்காது அறவிடுதல் வேண்டும். |
| (இ) தொழில் முயற்சிகளிலிருந்து நிலுவையாகவுள்ள தொகை மீதான நட்டக்கடன் ஏற்பாடு மீளாய்வாண் டின் இறுதியில் மொத்த நிலுவைத் தொகை யில் 57 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 410,118,417 தொகையான மொத்த நட்டக்கடன் ஏற்பாட்டில் ரூபா 350,111,099 அல்லது 84 சதவீதமானவை இரத்துச் செய்யப்ப | | ஆறவிட முடியாதவை என இனங்காணப்பட்ட தொகைகள் தொடர்பில் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவத ற்கு சட்டரீதியான நடவ டிக்கைகளோ அல்லது நிதிப் பிரமாணங்களின் |

| | | |
|---|---|---|
| ட்ட, மூடிவிடப்பட்ட மற்றும் செயற் பாடுகள் நிறுத்தப்பட்ட தொழில் முயற்சிகளிலிருந்து நிலுவையான தொகையினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. | | பிரகாரமான நடவடிக் கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) வருடாந்தக் கட்டணத்திற்கான மொத்த நட்டக்கடன் ஏற்பாட்டில் ரூபா 249.688.279 அல்லது 93 சதவீதமானவை 788 இரத்துச் செய்யப்பட்ட, 42 மூடிவிட ப்பட்ட மற்றும் 51 செயற்பாடுகள் நிறுத்தப்பட்ட தொழில் முயற்சி களிலிருந்து நிலுவையான தொகை யினை பிரதிநிதித்துவம் செய்கின் றது. | | ஆறவிட முடியாதவை என இனங்காணப்பட்ட தொகைகள் தொடர்பில் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவத ற்கு சட்டரீதியான நடவ டிக்கைகளோ அல்லது நிதிப் பிரமாணங்களின் பிரகாரமான நடவடிக் கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (உ) நிலுவையான நீர் வருமான த்திற்கான மொத்த நட்டக்கடன் ஏற்பாட்டில், ரூபா 1,404,086 தொகை வதுபிடிவல மற்றும் ஹொரண வீடமைப்புத்திட்டங்களின் நலனாளிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டியதாகும். | அநேக வீட்டுடமையாளர்கள் அவர்க ளது இடங்களிலிருந்து குடிபெயர்ந்துள் ளதுடன், சிலர் அவர்களது வீடுகளை வெளித்தரப்பினர்களிற்கு வாடகைக்கு வழங்கியுள்ளனர். ஆகையால், அவர்க ளது கடிதங்களை கையளிப்பதற்காக முகவரிகளை தேடிக்கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளது. | நிலுவையாக உள்ள மீதிகளை தாமதிக்காது அறவிடுதல் வேண்டும். |
| இந்த மீதிகள் மூன்று ஆண்டு களிற்கும் மேலாக நிலுவையாகக் காணப்படுகின்ற போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் இந்த மீதிகளை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிலுவையான மீதிகளை அறவிடுவ தற்காக சபை பல்வேறு நடவடி க்கைகளை மேற்கொண்டிருந்ததுடன், நிலுவையிலுள்ள மீதிகளை அறவிட முடியாதிருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) வதுபிடிவல வீடமைப்புத் திட்டத்தின் ஏலமிடலாளரான தனியார் கம்பனி யொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,604,200 ஆனதோர் தொகை ஒன்பது ஆண்டுகளிற்கும் மேலாக அறவிட ப்படாதுள்ளதுடன் இது தொடர்பில் சபைக்கும் ஏலமிடலாளருக்கும் இடையே உடன்படிக்கையொன்று காணப்படமையினை உறுதிப்படுத்து வதற்கான எவ்வித சான்றும் கிடைக்கப்பெறவில்லை. சபை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், அறவிட வேண்டிய தொகையினை | சட்டமா அதிபரின் கருத்துப் படி, சட்டரீதியான நடவடிக்கை எடுப்ப தற்கான காலம் தற்போது முடிவடைந்துள்ளது எனக் குறிப்பி டப்பட்டுள்ளமையால் சபை சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கு மாயின் அது வெற்றியளிக்கப் போவதுமில்லை. இருப்பினும், பொலி ஸாரிடமிருந்து அல்லது வற்புறுத்தல் கடிதமென்றின் ஊடாக இந்நிலுவை உறுதிப்படுத்தப்படுமாயின் சட்டரீதி யான நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. ஏலமிடலாளரை கண்டுபிடிதற்கு சபை பல்வேறு தடவைகளில் வேறுபட்ட | சட்டமா அதிபரின் கரு த்துப் படி, உரிய வேளையில் நடவடிக் கை எடுக்கப்பட்டிருத் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு 2019 திசெம்பர் 31 வரையிலும் முடியாது போயிருந்தது. | நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும், இந்த முயற்சிகள் எதுவும் வெற்றியளித்திருக்கவில்லை. | |
| (எ) | அரசாங்க நிறுவனங்களிடமி ருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 37,680,103 தொகை 4 ஆண்டு களிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக் கவில்லை. அதில், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 37,412,573 தொகை பன்னிரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவை யாக உள்ளது. இருப்பினும், அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படாது, ஐந்து ஆண்டுக ளிற்கும் மேலாக நிலுவையாக உள்ள தொகை மீது 100 சதவீத நட்டக்கடன் ஏற்பாடு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்ப ட்டிருந்தது. | ஜீஈடீபீ இற்குரிய ஆதனம், செயற் திட்டம் ஒன்றிற்காக சபைக்கு விடுவிக்கப்படுகையில் ஜீஈடீபீ இடமி ருந்து பெறவேண்டியவை அதற்கு எதிராக எதிரீடு செய்யப்படும். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையுடனும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தா பனத்துடனும் கலந்தாலோசித்து இந்த விடயம் தொடர்பில் உரிய தீர்மானத்தை மேற்கொள்வதற்கு பொது முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. ஏனைய நிலுவை களைத் தீர்க்குமாறு சபை கடன்பட்டோருக்கு கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து இதற்கு சாதகமான பதில் கிடைத்திருக்கவில்லை. | நிலுவையான மீதிகள் துரிதமாக அறவிடப்ப டுதல் வேண்டும். |
| (ஏ) | சீதாவக ஏற்றுமதி பதணிடல் வலயம் மற்றும் பியகம ஏற்றுமதி பதணிடல் வலயம் ஆகியவற்றால் செலுத்தப்பட்ட முறையே ரூபா 7,291,354 மற்றும் ரூபா 6,563,247 தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள், முறையே 2 ஆண்டுகள் மற்றும் 4 ஆண்டுக ளிற்கும் மேலாக தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | சீதாகவ ஏற்றுமதிச் செயன்முறைப்ப டுத்தல் ஒப்பந்தம் 2020 நவம்பரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நிர்மாண உத்தரவாத நிதியம் கோரிக்கையினை ஏற்க மறுத்தமை யினால் பியகம ஏற்றுமதி பதணிடல் வலயத்தின் ஒப்பந்தம் இடைநிறுத்தப் பட்டு முற்பண பிணைமுறி பிற்போடப்பட்ட துடன் இந்த விடயம் தற்போது நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுகி ன்றது. வேலை ஆரம்பித்தல் முற்பணத்தின் ஒரு பகுதி இடைக்கால பட்டியல்களினால் அறவிடப்பட்டது. | வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் கால தாமதமின்றி அறவிடப்ப டுதல் வேண்டும். |

### 1.7.2 செலுத்த வேண்டியவை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 6,315,327 தொகையான சில்லறைக் கடன்கொடுத்தோர் 3 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் மீளாய்வுசெய்து 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படும். வழங்கப்பட்டுள்ள காலவரையறை காரணமாக, கடன்கொடுத்தோர் ஒருவர் 06 வருடத்திற்குள் அவரது தொகை | கடன்கொடுத்தோர் அத ற்குரிய காலத்தில் தீர்க் கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | யினைக் கோர முடியும். ஆகையால், எந்தவொரு சீராக்கலையும் செய்ய முன்னர் முற்பணமாக கிடைத்த தொகை 06 வருடங்களிற்கு வைக்கப்பட்டிருக்கும். | |
| (ஆ) ரூபா 36,960,139 தொகையான பிடிகாசில் 29 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ரூபா 4,766,262 ஆனதோர் தொகை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய வலயங்கள் மற்றும் திணைக்களங்களுடன் கலந்தலோசிக்கப்பட்ட பின்னர், விடுவிக்கக்கூடிய தொகைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனையவை கணக்குகளிற்கு வருமானமாக எடுக்கப்படும்.<br><br>மேலும், சில பிடி காசுகள் கோரப்படாது திரள்வதைத் தவிர்ப்பதற்காக உத்தரவாத கடப்பாட்டுக் காலம் முடிவடைந்து 06 மாதத்திற்குள் அவற்றைக் கோரிப் பெறுதல் வேண்டுமென்ற நிபந்தனையை ஒப்பந்தங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ஆவ்வாறு கோரப்படாதுள்ள 03 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ரூபா 698,770 பிடிகாசினை வருமானமாக எடுப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். | விடுவிக்கப்பட முடியுமான தொகைகளை விடுவிப்பதற்கும் ஏனையவற்றை வருமானத்திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு | பகிர்விற்குப் பின்னரான மீளாய்வாண்டிற்குரிய தேறிய மிகை திரட்டிய நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள தற்போதுள்ள வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தேசிய பாதீட்டு முன்மொழிவுகளிலுள்ள புதிய ஏற்றுமதி பதணிடல் வலயங்களை | பகிர்விற்குப் பின்னரான மீளாய்வாண்டிற்குரிய தேறிய மிகை திரட்டிய நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உருவாக்குதல் போன்ற அபிவிருத்திச் செயற்பாடு களை சபை மேற்கொ ண்டு வருவதுடன் அந்த செயற்பாடுகளிற்கு முழுவ துமாக சபையினால் நிதி வழங்கப்படுகின்றது. இரு ப்பினும், திறைசேரியின் கோரிக்கைக்கு அமைய பிரதி வருடமும் பங்கி லாபம் செலுத்தப்படு கின்றது. | |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் ஒத்திசைவினையும் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ளாது ரூபா 17,136,814,477 தொகை யினை சபை 2019 ஆம் ஆண்டில் முதலீடு செய்திருந்தது. | ஆமைச்சினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரதியொன்று அரசாங்க கணக்காய்வுக் கிளைக்கு 2020.07.06 ஆந் திகதி கையளிக்கப்பட்டது. | நிதி அமைச்சரின் ஒத்தி சைவினைப் பெற்றுக்கொண்ட பின்னர் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள் ளப்படுதல் வேண்டும். |
| (இ) நிதிப்பிரமாணங்கள் 104(3) மற்றும் 104(4) | 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 13 வாகன விபத்துக்களுடன் சம்பந் தப்பட்ட ஆரம்ப அறிக் கைகள் அல்லது முழுமை யான அறிக்கைகள் 2019 திசெம்பர் 31 வரை சபையால் சமர்ப்பிக்கப்பட வில்லை. | வாகன விபத்துக்கள் சிறிய விபத்துக்கள் என்ப துடன் அவை ஏனைய சாரதிகளின் கவனக் குறைவால் ஏற்பட்டிருந் தன. சாத்தியமான அனைத்து நிலமைக ளிலும் சபை பொலிஸில் முறைப்பாடு செய்துள் ளது. | முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு 7 நாட்களிற்கு முன்னர் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இழப்பு இடம்பெற்று 3 மாதத்திற்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (ஈ) இலங்கை சனநா யக சோசலிசக் குடியரசின் 770(2) ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | கணக்கீட்டு உத்தியோக த்தரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 20,675,543 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புச் செய்யப்பட்டி ருந்தன. | பாரன் ஜயதிலக கட்டிட த்தில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த பயன்படுத்த முடியாத உருப்படிகள் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை அமுல்படுத் தும் வகையில் அகற்றப் பட்டன. குறித்த கட்டிடம் முழுவதையும் 10 ஆண்டு களிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பணிப்பா ளர் சபை தீர்மானித்திரு ந்ததுடன், கட்டிடத்தை புதுப்பிப்பதற்காக அதிலு ள்ள பொருட்களை அகற் றிய பின்னர் கட்டிடத் | கணக்கீட்டு உத்தியோகத் தரின் அங்கீகாரத்தைப் பெற் றுக் கொண்டதன் பின்னரே நிலையான சொத்துக்கள் கைதவிர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தைக் கையளிக்குமாறு முதலீட்டாளர் சபைக்கு அறிவித்திருந்தார். ஆகையால், அனைத்து பயன்படுத்த முடியாத / சேதமுற்ற பொருட்களும் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றி கைதவிர்ப்புச் செய்யப்பட்டன. | |
| (உ)2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 06(ஆ) ஆம் பிரிவு | ரூபா 14,250,000 கிரயம் கொண்ட 09 வாகனங்களை கைதவிர்ப்பதன் மீதான இறுதித் தீர்மானம் பணிப்பாளர் சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் வரிசை அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | சபை உரிய காலவேளைகளில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று சிக்கனமற்ற வாகனங்களை கைதவிர்ப்புச் செய்து வருகின்றது. வாகன அணி தொடர்பில் கிரய விளைவுள்ள முகாமைத்துவ முறைமையொன்றை அமுல்படுத்த வேண்டியதன் தேவை கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் சபையின் வாகன கைதரிப்பு நடைமுறைகள் குறித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை கைதவிர்ப்பதன் மீதான இறுதித் தீர்மானம் பணிப்பாளர் சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் வரிசை அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும். |
| (ஊ) 2019 திசெம்பர் 09 ஆந் திகதிய பீஈடீ 03/2019 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சபை அதன் நிரந்த ஊழியர் ஒருவருக்கு ரூபா 62,000 அல்லது மாதாந்தச் சம்பளம் ஆகியவற்றில் எது கூடியதோ அதனை அனைத்து ஊழியர்களிற்கும் வருடாந்த உபகாரச் சம்பளமாகச் செலுத்தியிருந்தது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டில் இவ்வாறு உபகாரப் படியாக செலுத்திய ரூபா 80,741,628 தொகைக்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிரந்த ஊழியர் ஒருவருக்கு ரூபா 60,000 அல்லது மாதாந்தச் சம்பளம் ஆகியவற்றில் எது கூடியதோ அதனையும் அமைய அல்லது ஒப்பந்த அடிப்படையிலுள்ள ஊழியர் ஒருவருக்கு ரூபா 60,000 இனையும் 2019 இற்கான உபகாரச்சம்பளமாகச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டிற்காக ஒரு மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூபா 62,000 ஆகியவற்றில் எது கூடியதோ அதனை உபகாரப் படியாகச் | சபை சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமே உபகாரச் சம்பளத்தை செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்துவதற்கு கைத் தொழில் ஏற்றுமதி மற் றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியிரு ந்தார். மேலும், இதற் காக கைத்தொழில் ஏற்று மதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரின் அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். | |
| (எ) 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய பீஈடீ 1/2015(i) ஆம் இல க்க பொது முயற்சி கள் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சபையின் 23 உத்தியோக த்தர்களிற்கு மீளாய்வா ண்டின் போது ரூபா 8,498,331 தொகை சாரதிப் படியாக சபையால் செலுத் தப்பட்டிருந்தது. | சபையின் சாரதிகளிற்குப் பதிலாக வாடகைக்கு அமர்த்தப்படுகின்ற சார திக்கு ரூபா 15,000 மாதாந்த படியினைச் செலுத்துவதற்கு 2003 ஆம் ஆண்டில், பணிப் பாளர் சபை தீர்மானித் திருந்தது. இந்தக் கொடு ப்பனவு 15 ஆண்டுகளாக திருத்தப்படாமையால் இந்தப் படியினை 2019 ஆம் ஆண்டில் அதிகரி ப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது. | உத்தியோகத்தர்களிற்கு சாரதி ஒருவரோ அல்லது சாரதி ஒருவருக்கான படியோ வழங்கப்படக் கூடாது |
| (ஏ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறி க்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகள் | உரிய அங்கீகாரம் பெறப் படாது சபையின் ஏழு ஊழியர்கள் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முத லீட்டு மேம்பாட்டு அமைச் சிற்கு விடுவிக்கப்பட்டிருந் ததுடன் அவர்கள் சார்பில் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 863,692 தொகை செலவிடப்பட்டிருந்தது. | விடுவிக்கப்பட்ட ஊழியர் கள் சார்பில் செலவிடப்ப ட்ட தொகையினை உரிய அமைச்சிடமிருந்து அறவிடுவதற்கு ஏற்பாடு கள் செய்யப்படும். | அமைச்சரவையின் அங்கீகா ரமின்றி வரிசை அமைச்சிற்கு அல்லது வேறு நிறுவனங் களிற்கு ஊழியர்களை விடு வித்தல் கூடாது என்பதுடன் சபை அவ்வாறு விடுவித்த ஊழியர்களிற்காக சம்பளம் எதனையும் செலுத்தவும் கூடாது |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகளின் விளைவு ரூபா 1,158,307,307 மிகையொன்றாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மிகை ரூபா 759,093,091 ஆகக் காணப்பட்டது. ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 399,214,216 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவினத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 424,257,940 அதிகரிப்பிற்கு எதிராக வருமானம் மற்றும் நிதி வருமானம்

என்பன முறையே ரூபா 756,477,284 மற்றும் ரூபா 66,994,872 ஆல் அதிகரித்திருந்தமையே இதற்குக் காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கட்டுநாயக்க ஏற்றுமதி பதணிடல் வலயம் வலயத்திலுள்ள தின்மக் கழிவுகளை அகற்றுவதற்காக மீளா ய்வாண்டில் ரூபா 29,455,908 தொகையினை வலயம் செலவிட்டிருந் தததுடன் ரூபா 22,020,647 தொகை மாத்திரமே தொழில் முயற்சிகளிற்காக சாட்டப்பட்டிருந்தது. ஆகையால் வலயத்திலுள்ள தின்மக் கழிவுகளை அகற்றுவது தொடர்பில் ரூபா 7,435,261 நட்டம் 2019 ஆம் ஆண்டில் சபைக்கு ஏற்பட்டிருந்தது. | கழிவுகளை புதைப்பதற்காக பயன் படுத்திய காணியினை குத்தகைக்கு வழங்கியமையால் பெறப்பட்ட வருமா னத்திலிருந்தே தின்மக் கழிவினை அகற்றுவதற்கான நட்டம் ஈடுசெய்யப் பட்டுள்ளது. | திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நட்டம் குறைக்கப்பட்டு காணி களை முதலீட்டுச் செயற் திட்டங்களிற்காகப் பயன் படுத்துதல் அதிகரிக்கப் படுதல் வேண்டும். |
| (ஆ) சபையின் முன்னாள் நிறை வேற்று உதவியாளர், சபை முகாமை த்துவத்தின் முன்கூட்டிய அனுமதி யின்றி வெளிநாடு சென்றிருந் தமையால் மாதாந்தச் சம்பளத்தைச் செலுத்தாது 2013 ஒக்தோபர் 24 முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப் பட்டிருந்தார். ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்ற பின்னர் குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டதுடன் இடைநிறுத்தப்பட்டி ருந்த காலத்திற்கான மாதாந்த உழைப்புக்களைச் செலுத்தாதும் உள்ளக ஒழுக்காற்று விசாரணை யினை மேற்கொள்ளாதும் 2016 திசெம்பர் 02 முதல் அவரை சபை பதவிநீக்கம் செய்திருந்தது. பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் இழப்பீட்டினைக் கோரி கொழும்பு, தொழில் நீதிமன்றில் சபைக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்திருந்தார். வழங்கப்பட்ட தீர்ப்பின் படி, | தொழில் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைய, பதவிநீக்கம் நியாயமற்றது எனவும் ரூபா 1,300,968 இழப்பீடு குறித்த நிறைவேற்று உதவியாளருக்குச் செலுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந் தது. அதற்கமைய, கைத்தொழில் பிணக்கினை தீர்த்துவைக்கும் வகையில் உரிய தொகையினை கொழும்பு தொழில் நீதிமன்றில் இறுதிக் கொடுப்பனவாக வைப்பிலிடு வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | நியாயத்துவ அடிப்படை யிலேயே பதவிநீக்கம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

பதவிநீக்கம் நியாயமற்றது எனவும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,300,968 இழப்பீடு செலுத்தப்பட வேண்டு மெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது சீதாவக்க, கொக்கல, கடுநாயக்க மற்றும் வதுபிடிவல ஆகிய ஏற்றுமதிப் பதணிடல் வலயத்திலும் கண்டி கைத்தொழில் பேட்டையிலுமுள்ள 69,354 சதுர அடிகள் விஸ்தீரணமடைய 65 வளவுகள் உடன் படிக்கைகளில் கைச்சாத்திடாது ரூபா 26,080,283 வருடாந்த வாடகைக்கு வெளித்தரப் பினர்களிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கைகளைத் தயார்படுத்தல் இறுதிக்கட்டத்தில் உள்ளன. | கால தாமதமின்றி உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் சென்முன்னேற்றங்கள் கீழே தரப்படுகின்றன. | | |

| ஆண்டு | உடன்படிக்கை கள் கைச்சாத்தி டப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை (புதிய செயற்தி ட்டங்கள் மற்றும் காலநீடிப்புச் செய்யப்பட்டவை) | வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை (புதிய உடன் படிக்கைகள் மற்றும் கால நீடிப்புச் செய்யப்பட்டவை) | இடைநிறுத்தப்பட்ட, மூடப்பட்ட அல்லது உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | | இடை நிறுத்தப் பட்டவை | மூடப்பட்டவை | உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டவை |
| 2015 | 157 | 113 | 2 | 12 | 23 |
| 2016 | 186 | 106 | 3 | 6 | 79 |
| 2017 | 104 | 104 | 4 | 6 | 152 |
| 2018 | 95 | 91 | 10 | 23 | 156 |
| 2019 | 105 | 60 | 27 | 20 | 140 |

| | | |
|---|---|---|
| இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப் படுகின்றன.<br>(i) வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டங்கள் தொடர்பில் 2015 முதல் 2019 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க குறைவொன்று அவதானிக்கப்படுகின்றது. | 2016 யூன் முதல் 2018 ஏப்ரல் வரை கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள் இன்மை காரணமாக புதிய முதலீட்டுச் செயற்திட்டங்களைப் பெற்றுக் கொள்வதில் வீழ்ச்சி காணப்படுகின்றது. புதிய 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இத்திட்டத்தின் கீழ் முதலீடுகளை கவர்ந்திழுத்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு குறிப்பிட்டளவு காலம் தேவைப் படுகின்றது. | உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் செயற்திட்டங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்துடன், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்து அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முதலீட்டாளர்களிற்கு உதவுவதற்காக சபை பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை, 2019 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தருந்த செயற்திட்டங்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டன. | அத்துடன், வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்வேறுபட்ட அனுமதிகளை அதாவது காணிகளை விடுவித்தல், சுற்றாடல் அனுமதி, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதிகள் போன்றவற்றை செயற்திட்டங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதனாலும் சபையால் கட்டுப்படுத்த முடியாத பல காரணங்களாலும் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் தாமதமடைந்துள்ளது. | |

இச்செயன்முறையினை துரிதப்படுத்துவதற்காக நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் சபையால் எடுக்கப்பட்ட தீர்மான த்திற்கமைய, நடைமுறைப்படுத்தப்படாதுள்ள மற்றும் முதலீடுகள் தேறாது நீண்ட காலமாக வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்காதுள்ள செயற் திட்டங்களின் உடன் படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டன. அதற்கமைய, அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் அபிவிருத்தி செய்த காணிகளை புதிய செயற்திட்டங்களிற்காக பயன்படுத்த முடியும்.

இந்த நடவடிக்கை முதற்தடவையாக 2013 இல் எடுக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன் விளைவாக, 2015 – 2019 காலப்பகுதியில் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்படுவதனைக் குறைப்பதற்கும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதனை அதிகரிப்பதற்கும் சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) 2015 முதல் 2019 வரை சபையால் கவர்ந்திழுக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வருமாறு

| ஆண்டு | கூட்டிணைந்த திட்டத்தின் படி வருடாந்த இலக்கு (2014-2016 மற்றும் 2017-2020) | உள்ளபடியான அடைவு | இலக்கின் சதவீதமாக வருடாந்த உள்ளபடியான அடைவு |
|---|---|---|---|
| | யூஎஸ்டொ. மில்லியன் | யூஎஸ்டொ. மில்லியன் | |
| 2015 | 3,500 | 970 | 28% |
| 2016 | 5000 | 801 | 16% |
| 2017 | 1,000 | 1,710 | 171% |
| 2018 | 2,500 | 2,367 | 95% |
| 2019 | 3,000 | 1,189 | 40 % |

2019 ஆம் ஆண்டில் சபையினால் உள்ளபடியாக கவர்ந்திழுக்கப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகள் இலக்குடன் ஒப்பிடுகையில் 40 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 50 சதவீதக் குறைவாகும்.

சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட எதிர்பாராத நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எப்போதும் அடைய முடிவதில்லை.

2018 ஒக்தோபர் முதல் 2019 திசெம்பர் வரை நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்தெழும் ஞாயிறு தாக்குதல் போன்றன 2019 இன் எ∴.ப்டிஐ செயலாற்றல் மீது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

அத்துடன், வரி நிவாரணத்திற்காக 2019

இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்திழுப்பதற்கான உத்திகளை சபை உருவாக்குதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு இறைவரித் திருத்தங்கள் இதுவரை வெளியிடப்படாததுடன் நிர்வாக ரிதியான தீர்மானங்கள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன. | |
| (இ) சபையானது அதன் நிலக் குத்தகை உரிமைகள், வளவுகளின் மீதான அக்கறைகள் மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள் உட்பட வளவில் நிரந்தரமாக நிறுவப்பட்ட சகல பொறிகள், இயந்திரங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பவற்றை முத்தரப்பு உடன்படிக்கைகளை கைசாத்திடுவதன் மூலம் ஏதாவது வங்கி மற்றும் / அல்லது கடன் நிறுவனங்களிடம் அடகு வைப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது. இருப்பினும், சில கம்பனிகள் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த கடன்களைச் செலுத்தாது கலைக்கப்பட்டிருந்ததுடன், காணியின் பெறுமதி குறைவடைதல் மற்றும் பயன்படுத்தாத காணிகளின் அமையச் செலவு என்பவற்றை சபை பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு. | | |
| (i) மபுதுகல, ஹொரணவிலுள்ள பேர்த் தோட்டம் ஆயுர்வேத மருத்துவக் கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆதனம் ரூபா 5 மில்லியன் கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க வங்கி ஒன்றுக்கு பிணை வைக்கப்பட்டிருந்தது. ஆனால், மேற்குறிப்பிடப்பட்ட கடனை பெறுவதற்காக இந்த ஆதனம் தொடர்பில் முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. கடனை செலுத்தத் தவறியதன் காரணமாக 2013 மே 12 இல் வங்கியால் ஆதனம் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் பொது ஏலமிடுதலில் ஆதனத்தை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஆதனத்தை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் புதிய முதலீட்டாளருக்கும் சபைக்கும் இடையே 2019 திசெம்பர் 31 வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | காணியின் குத்தகை உரித்தினை கைமாற்றுவதற்காக வளமான கொள்வனவாளர் ஒருவரை வங்கி எதிர்பார்த்துள்ளது. தற்போது, இக்காணி எதிர்கால முதலீட்டாளர்களிற்கு வழங்குவதற்காக பிரேரணைகளைக் கோரும் விளம்பரத்திந்காக தயார்படுத்தப்டுள்ளது. | காணி பயன்படுத்தப்படாமையால் ஏற்படுகின்ற அமையச் செலவினைக் குறைப்பதற்காக எதிர்கால முதலீட்டாளர் ஒருவருக்கு இக்காணி குத்தகைக்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| (ii) மீரிகம ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள காணியொன்று ஆடைக் கம்பனி ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆதனம் தனியார் வங்கி ஒன்றுக்கு பிணையாக வைக்கப்பட்டு முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த தொழில்முயற்சி 2011 இல் அதனது | சபைக்குரிய வலயங்களில் வெற்றிடமாக உள்ள காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்காக அண்மையில் வெளியிடப்பட்ட | காணி பயன்படுத்தப்படாமையால் ஏற்படுகின்ற அமையச் செலவினைக் குறைப்பதற்காக எதிர்கால முதலீ |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளை நிறுத்தியிருந்ததுடன் வங்கிக் கடனை செலுத்தியிருக்காமை காரணமாக ஆதனத்தின் குத்தகை உரிமை வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டு 2011 யூலை 12 ஆந் திகதி காணி ஏலமிடப்பட்டது. 2019 பெப்ரவரி 28 ஆந் திகதியில் உள்ளவாறு கடன் நிலுவைத் தொகை யூஎஸ்டொலர் 796,513 ஆகும். இருப்பினும், ஆதனத்தை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் புதிய முதலீட்டாளருக்கும் சபைக்கும் இடையே 2019 திசெம்பர் 31 வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பத்திரிகை விளம்பரத்தில் இக் காணியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ட்டாளர் ஒருவருக்கு இக்காணி குத்தகைக்கு வழங்கப்படுதல் வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மார்ச் 24 ஆந் திகதி இடம்பெற்ற மிரிஜ்ஜவல ஏற்றுமதிப் பதணிடல் வலயத்தின் திறப்பு விழாவிற்காக ரூபா 6,001,637 தொகை சபையால் செலவிடப்பட்டிருந்தது. சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் திறப்பு வழாவிற்காக சபை நிதியத்தை செலவிடும் அடிப்படை, கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த செலவினத்திற்காக சபை உதவும் தர்க்கரீதியான அடிப்படை யாதெனில், முதலீட்டுப் பெறுமதியின் முக்கியத்துவமும் செயற்திட்டங்களின் பொருளாதார விளைவு மாகும்.<br>இந்த நிகழ்வுடன் சம்பந்தப்பட்ட செலவினம், பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மற்றும் விசேட அதீதிகளின் பங்குபற்றலுடன் விழா இடம் பெற்றமையால் இது ஒரு தேசிய நிகழ்வாக அமைந்திருந்தது. | சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் திறப்புவிழாவிற்காக சபை நிதியத்தை செலவிடாதிருத்தல் வேண்டும். |

## 3.5 பயன்படுத்தாத மற்றும் விளைவற்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சீதாவக ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள ரூபா 10,007,186 கிரயம் கொண்ட 82 இருப்பு உருப்படிகள் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த உருப்படிகள் 5 ஆண்டுகளிற்கும் மேலாக பயன்படுத்தப்படாதிருப்பதுடன் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் இந்த உருப்படிகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அத்தியாவசியாக தேவைப்படுகின்ற பொருட்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டு வீணாகாது பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.6 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 முதல் 2015 ஆம் ஆண்டு காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 05 ஏற்றுமதி பதணிடல் வலய மற்றும் தலைமை அலுவலகத்திற்குரிய 14 | சில செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாதுள்ளதுடன் இன்னும் சில செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்சி | தொடர்ச்சியான பின் தொடர்தல்கள் மேற்கொள்ளப்பட்டு குறித்துரைத்த காலத்தில் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இச்செயற்திட்டங்கள் மீது 2019 திசெம்பர் 31 வரை ரூபா 605,950,756 தொகை செலவிடப்பட்டுள்ளது. | னைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. 2020 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) வலயத்திலுள்ள முதலீட்டாளர்களிற்கு வழங்கப்படும் நீரின் தரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் தங்குதடையின்றி நீரை விநியோகித்தல் ஆகிய நோக்கங்களுடன் சீதாவக ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள நீர் சுத்திகரித்தல் பொறிக்குரிய “ரெபிட் சேன்ட் பில்டர்” (06 பில்டர்) இன் “பில்டர் மீடியா” இனை மீளவைத்தல் ஒப்பந்தம் ரூபா 16,040,980 கிரயத்தில் 2017 யூன் 27 ஆந் திகதி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபா 7,291,354 தொகை முற்பணமாக 2017 யூலை 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த வேலைகள் முடிவடைய வேண்டிய திகதி 2018 ஆகஸ்ட் 23 ஆகும். இருப்பினும், இந்த ஒப்பந்த வேலைகள் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதி வரை முடிக்கப்பட்டிருக்கவில்லை. | பில்டரை உரிய இடத்திற்கு விநியோகித்தல் மற்றும் பில்டர்களை புனரமைத்தல் ஆகிய இரண்டு ஒப்பந்த வேலைகள் காணப்படுவதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வாய்மொழி மூலம் அறிவித்திருந்தது. இந்த இரண்டு கேள்விகோரல்களும் முடிவடைந்துள்ளதுடன் தற்போது அவை கையளிக்கும் நிலையில் காணப்படுகின்றன. | செயற்திட்டங்கள் உரிய கால எல்லையில் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிலுள்ள வரையறையினைக் கருத்திற்கொள்ளாது நிரந்தர, ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டமையால் ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளர், 20 முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அற்றோர் மற்றும் 111 முதலாந்தர – திறனற்ற ஊழியர்கள் அங்கீகரித்த பதவியணியில் மிகையாகக் காணப்பட்டனர். | சேவையின் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய மூன்று நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிகளிற்கு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆகையால், நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை அங்கீகரித்த ஊழியர் போப்பினைக் காட்டிலும் கூடுதலாகக் காணப்படுகின்றது. அத்துடன், மிகையாக உள்ள முகாமைத்துவ உதவியாளர் தர மற்றும் முதலாந்தர திறன் நிலையற்ற ஏனைய அனைத்து ஊழியர்களும் 29/2019 ஆம் இலக்க 2019.09.18 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக் கையின் பிரகாரம் | ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுகையில் சபையின் உள்ளபடியான மனித வளத் தேவை கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிரந்தரமாக்கப்பட்ட அமைய/ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டோ ராகும். | |
| (ஆ) சபையின் 529 முகாமைத்துவத் தர ஊழியர்களில் 120 ஊழியர்கள் 60 வயதை பூரணப்படுத்தி எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் ஓய்வுபெற வுள்ளனர். இருப்பினும், சபையின் எதிர்கால மனிதவளத் தேவையி னைக் கருத்திற்கொண்டு மாற்றுத் திட்டமொன்று 2019 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அனுபவமுடைய தொழில்சார் அமைப் பொன்றினால் அல்லது ஆளொருவ ரால் அல்லது குறித்த துறையிலுள்ள நிபுணர் ஒருவரினால் மாற்றுத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்ற நிலைப்பாட்டில் முகாமைத்துவம் உள்ளது. அதற்கமைய, மாற்றுத் திட்டம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இனியும் தாமதிக்காது எதிர்கால மனிதவளத் தேவையினைக் கருத்திற் கொண்டு மாற்றுத் திட்டமொன்று தயாரிக் கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 இற்கான சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிறை வேற்றுவதற்காக திட்டமிடப்பட்டு ரூபா 6,764.8 மில்லியன் மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 101 செயற்பாடுகள் பட்டியலிடப்பட்ட வாறு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | சில செயற்பாடுகள் உரிய திகதியில் நிறைவேற்றப்பட்டதுடன் பல்வேறு காரணங்களால் ஏனை யவை மேற்கொள்ளப்பட்டு வருகி ன்றன. | மீளாய்வாண்டில் நிறைவேற்றுவ தற்கு திட்டமிடப்பட்ட செயற்பா டுகள் அவ்வாண்டிலேயே நிறை வேற்றப்படுதல் வேண்டும். |

### 4.2 சுற்றாடல் விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டிய சீதாவக்க, ஹொரண மற்றும் கொக்கல ஏற்றுமதி பதணிடல் வலயங்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 முதல் 08 ஆண்டுகளாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நியமங்களிற்கு அமைவுறாமையால் சுற்றாடல் பாது காப்பு அனுமதிப் பத்திரத்தைப் (EPL) பெற்றுக் கொள்ளாது செயற்பட்டு வருகின்றன. | முத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் தொடர் பில் கொக்கல ஏற்றுமதி பதணிடல் வலயத்தில் களப்பரி சோதனையினை மேற்கொண்ட துடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பதிலளிப்பிற் காக காத்திருக்கப்படுகின்றது. ஹொரண மற்றும் சீதாவக்க ஏற்றுமதி பதணிடல் வலயங் களிலுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறிகளிற்கு தேவைப்படுகின்ற விரிவாக்கல்/ | காலதாமதமின்றி வலயங்களிற் காக சுற்றாடல் அனுமதிப்பத்திர ங்களை பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேம்படுத்தல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், இதற்கு ஏறத்தாழ 02 ஆண்டுகள் காலமெடுக்கும் என்பதுடன் EPL இனை பெற்றுக்கொள்வதற்காக காணப் படுகின்ற தடை இது மாத்திர மேயாகும். | |
| (ஆ) ஹொரண ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள தொழில் முயற்சிகளின் உற்பத்திச் செயன்முறையால் உருவாக்க ப்படுகின்ற நச்சுக் கழிவினை சுற்றாடல் தோழமையுள்ள விதத்தில் அகற்றுவதற்கு தொழில்முயற்சிகளிடம் பயனு ள்ள பொறிமுறையொன்று காணப்படாமையால் கடந்த நான்கு ஆண்டுகளிற்கும் மேலாக இக்கழிவு தொழிற் சாலை வளவில் சேகரிக்கப் பட்டு வருகின்றது. | இவ்வகையான நச்சுக் கழிவு களை அகற்றுவதற்கு இலங்கை யில் காணப்படுகின்ற முறை கூட்டுச் செயன்முறைப்படுத்த லாகும். தற்போது இலங்கை யிலுள்ள ஒரேயொறு கம்பனி மாத்திரமே இவ்வாறான கூட்டு செயன்முறைப்படுத்தல் நடவடிக் கையில் ஈடுபடுகின்றது. அது வரையிலும், இந்தக் கழிவு, சுற்றாடலிற்கு பாதகமற்ற விதத் தில் தொழிற்சாலை வளவில் சேகரித்து வைக்கப்படுகின்றது. | நச்சுக் கழிவினை சுற்றாடல் தோழமையுள்ள விதத்தில் அகற் றுவதற்கு பயனுள்ள பொறிமுறை யொன்று தாமதமின்றி அறிமுகப் படுத்தப்படுதல் வேண்டும். |